# ஷாக் தகவல்




**சென்னை, ஏப்.30:** 125 ஆண்டுகால வானிலை வரலாற்றில் மிகக் குறைந்த மழைப்பொழிவு...? ஷாக் தகவல் இந்த ஜூன் மாதத்தில் தற்போதுவரை நாடு முழுவதற்குமான தென்மேற்குப் பருவமழை மழைப்பொழிவானது வெறும் 85.2 மிமீ ஆக உள்ளது. தென்மேற்கு பருவக்காற்றின் முதல் மாதமாக ஜூன் விளங்குகிறது. இருப்பினும், இம்மாதத்தில், நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் இயல்பை விட அதிகமான வெப்பநிலை நிலவுகிறது.

# இயற்கையின் கோரதாண்டவத்தால் நிலைகுலைந்து போன வெனிசுலா!



1,500+ மரணங்கள்... 50,000+ பேரை காணவில்லை... இயற்கையின் கோரதாண்டவத்தால் நிலைகுலைந்து போன வெனிசுலா. நிலநடுக்கம் ஏற்பட்டு முக்கியத் தேடுதல் காலமான 72 மணி நேரம் முடிந்துவிட்டதால், இடிபாடுகளுக்குள் மனிதர்கள் உயிருடன் இருப்பதற்கான வாய்ப்பு குறைந்து வருகிறது வெனிசுலாவில் கடந்த புதன்கிழமை ஏற்பட்ட சக்திவாய்ந்த இரட்டை நிலநடுக்கங்களில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 1,500-ஐ நெருங்கியுள்ளது. மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்களின் எண்ணிக்கை 3,500-ஐ தாண்டியுள்ளது.

# "தவெக அரசு 5 ஆண்டுகளுக்கு தொடரும்" – திருமாவளவன்




**சென்னை, ஏப்.30:** விசிக தலைவர் திருமாவளவன் மதுரையில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது பேசிய அவர், " எங்களைப் பொறுத்தவரை தமிழக வெற்றிக கழக அரசு கவிழ வாய்ப்பில்லை. 5 ஆண்டுகளுக்கு எந்த ஒரு இடையூறும் இல்லாமல் இந்த அரசு இயங்கும். உள்ளாட்சி, நாடாளுமன்ற தேர்தல் வரை என்னென்ன தேவைகள் வேண்டும் தெரிவித்து தான் காங்கிரஸ் தமிழக வெற்றிக் கழக கூட்டணியில் இணைந்தார்கள். இடதுசாரி கட்சிகளும் ஆதரவு நிலைப்பாட்டை தான் எடுத்துள்ளார்கள், அதே நிலைப்பாட்டில் தான் விசிகவும் ஆதரவு தெரிவித்தது. அதிமுகவில் இருந்து 6 எம்.எல்.ஏக்கள் ராஜினாமா செய்துள்ளது மிகப்பெரிய பிரச்சனை. இது ஏன் என்பதை அதிமுக தான் தெளிவுபடுத்த வேண்டும். முதலமைச்சர் சாதியின் அடையாளங்களை ஊக்கப்படுத்துவதை விரும்பவில்லை என்பதை வரவேற்கிறோம்" என்று அவர் தெரிவித்தார்.

# வதந்திகளை நம்ப வேண்டாம் ஆவின் நிர்வாகம் விளக்கம்..




**சென்னை, ஏப்.30:** சென்னை மாநகரில் ஆவின் பால் விநியோகம் கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளதாக வெளியான தகவல்கள் முற்றிலும் தவறானவை என்று ஆவின் நிர்வாகம் விளக்கம் அளித்துள்ளது. மேலும், அனைத்து வகை ஆவின் பாலும் வழக்கம்போல் தடையின்றி விநியோகிக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக ஆவின் வெளியிட்டுள்ள அறிக்கையில், சில ஊடகங்களில் சென்னை மாநகரில் ஆவின் பால் விநியோகம் குறைக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன. ஆனால், அவை உண்மைக்கு புறம்பானவை என்றும், சென்னையில் அனைத்து வகை ஆவின் பாலும் எந்தவித தடையும் இன்றி தொடர்ந்து விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகரில் ஆவின் தனது விரிவான விநியோக வலையமைப்பு மூலம் தினசரி சராசரியாக 14.50 லட்சம் லிட்டர் பாலை நுகர்வோருக்கு வழங்கி வருவதாகவும் கூறப்பட்டுள்ளது. மேலும், ஜூன் 2025-ல் தினசரி சராசரியாக 14.46 லட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்பட்ட நிலையில், ஜூன் 2026-ல் அது 14.82 லட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது. இதன் மூலம் கடந்த ஆண்டைவிட 36 ஆயிரம் லிட்டர் கூடுதலாக பால் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக ஆவின் தெரிவித்துள்ளது. எனவே, எந்தவொரு பால் வகையிலும் விநியோகம் குறைக்கப்படவில்லை என்றும், நுகர்வோர் தேவைக்கு ஏற்ப வழக்கமான முறையில் பால் விநியோகம் நடைபெற்று வருவதாகவும், தவறான தகவல்களை நம்ப வேண்டாம் என்றும் பொதுமக்களிடம் ஆவின் கேட்டுக்கொண்டுள்ளது. இதற்கிடையில், கோவை மாவட்ட ஆவின் நிர்வாகம், மாதாந்திர பால் அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த லிட்டருக்கு ரூ.2 சிறப்பு தள்ளுபடி சலுகை ரத்து செய்யப்பட்டுள்ளது என்ற தகவலும் வெளியாகியது. இதற்கும் விளக்கம் அளித்துள்ள கோவை ஆவின் நிர்வாகம், மாதாந்திர பால் அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ரூ.2 தள்ளுபடி சலுகை தொடர்ந்து அமலில் இருக்கும் என்றும், அந்தச் சலுகை ரத்து செய்யப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளது.

# அமைச்சர் விஸ்வநாதன் சொன்ன 'மகிழ்ச்சி' தகவல்




**சென்னை, ஏப்.30:** வரும் சட்டப் பேரவை கூட்டத் தொடர் மிகச் சிறப்பாக நடக்க, ஆளுநர் அவருடைய முழு ஆதரவை தருவதாக கூறியுள்ளார் என்று அமைச்சர் விஸ்வநாதன் தெரிவித்தார். தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு, சென்னையில் உள்ள மாநிலக் கல்லூரியின் முன்னாள் மாணவர்களின் சார்பாக, அந்த கல்லூரி வளாகத்தில் 52 மரக் கன்றுகள் நடும் விழா, ரத்த தானம் முகாம் மற்றும் உடல் உறுப்பு தானம் உறுதிமொழி ஏற்பு உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன. உயர் கல்வித்துறை அமைச்சர் விஸ்வநாதன் தொடங்கி வைத்த இந்த நிகழ்ச்சியில், மாநிலக் கல்லூரியின் முதல்வர் ராமன், மறைந்த நகைச்சுவை நடிகர் விவேக்கின் மனைவி அருட்செல்வி, முன்னாள் மாணவர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் விஸ்வநாதன், "தமிழக ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகரை சபாநாயகர் ஜே.சி.டி. பிரபாகர், சட்டத் துறை அமைச்சர் சி.டி..ஆர். நிர்மல் குமார் மற்றும் உயர்கல்வித் துறை அமைச்சரான நான் ஆகியோர் மரியாதை நிமித்தமாக நேற்று (ஜூன் 29) சந்தித்தோம். ஏனென்றால், புதிய அரசு பொறுப்பேற்றவுடன் ஆளுநரை சந்திப்பது மரபாகும். அந்த மரபின் அடிப்படையிலேயே ஆளுநரை சந்தித்தோம். மேலும், சட்டப் பேரவையில் ஆளுநர் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன் அடிப்படையில், மரியாதை நிமித்தமாக நேரிலும் சந்தித்து அவருக்கு நன்றி தெரிவித்தோம். அப்போது, இனி வரக் கூடிய காலங்களில் மிகவும் நேர்த்தியாகவும், மக்கள் பிரச்சனைகளை ஜனநாயக முறையிலும் சட்டப் பேரவையில் விவாதிக்க உள்ளோம் என்று ஆளுநரிடம் நாங்கள் கூறினோம். அப்போது ஆளுநர் அர்லேகர், இந்த அரசு சிறப்பான அரசு, மிக சிறப்பாக செயல்படுகிறது என்று பாராட்டினார். தவெக அரசுக்கு என்னுடைய வாழ்த்துகள். வரும் சட்டப் பேரவை கூட்டத் தொடர் மிகச் சிறப்பாக நடக்கும். அதற்கு என்னுடைய முழு ஆதரவை தருவேன் என்றும் ஆளுநர் அர்லேகர் கூறினார்" என அமைச்சர் விஸ்வநாதன் தெரிவித்தார். பெற்றுக்கொள்ளும் வகையில், ஏனாம் நிர்வாகம் அதிகாலை நேரங்களை அவர்களுக்காக இன்று முதல் ஒதுக்கியுள்ளது.

# அரசு கலை, அறிவியல் கல்லூரி பணியிடமாறுதல் கலந்தாய்வு ஜூலை 7ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம்



**சென்னை, ஏப்.30:** உயர்கல்வித் துறையின் கீழ் உள்ள அரசு கலை, அறிவியல், மற்றும் கல்வியியல், கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் நலன் கருதி 2026-27ஆம் ஆண்டு பணியிடமாறுதலுக்கான பொது கலந்தாய்விற்கு (General Counselling) இணையவழியில் வரும் 30.06.2026 முதல் 07.07.2026 வரை விண்ணப்பிக்கலாம் என உயர்கல்வித் துறை அமைச்சர் விஸ்வநாதன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து உயர்கல்வித் துறை அமைச்சர் தெரிவித்துள்ளதாவது, "தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களின் வழிகாட்டுதலின்படி, உயர்கல்வித்துறையின் கீழ் உள்ள அரசு கலை, அறிவியல், மற்றும் கல்வியியல், கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் நலன் கருதி 2026-27ஆம் ஆண்டு பணியிடமாறுதலுக்கான பொது கலந்தாய்வு நடத்திட ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி, உயர்கல்வித் துறையின் கீழ் இயங்கும் அரசு கலை. அறிவியல், மற்றும் கல்வியியல், கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள். நூலகர்கள், உடற்கல்வி இயக்குநர்கள் ஆகியோர்களுக்கு 2026-27ஆம் ஆண்டு பணியிடமாறுதலுக்கான பொது இடமாறுதல் கலந்தாய்விற்கு (General Counselling) 30.06.2026 5 07.07.2026 வாயிலாக விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த பொது கலந்தாய்வில் கலந்து கொள்ள கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் கீழ் உள்ள ஆசிரியர்கள், நூலகர்கள். உடற்கல்வி இயக்குநர்கள் http://www.dcetransfer.in என்ற இணையதள முகவரியிலும், விண்ணப்பித்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன்". இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உதவி பேராசிரியர் தேர்வு: முடிவுகளை மறுபரிசீலனை செய்யுங்கள் நயினார் நாகேந்திரன்!



**சென்னை, ஏப்.30:** உயர்கல்வித் துறையின் கீழ் உள்ள அரசு கலை, அறிவியல், மற்றும் கல்வியியல், கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் நலன் கருதி 2026-27ஆம் ஆண்டு பணியிடமாறுதலுக்கான பொது கலந்தாய்விற்கு (General Counselling) இணையவழியில் வரும் 30.06.2026 முதல் 07.07.2026 வரை விண்ணப்பிக்கலாம் என உயர்கல்வித் துறை அமைச்சர் விஸ்வநாதன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து உயர்கல்வித் துறை அமைச்சர் தெரிவித்துள்ளதாவது, "தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களின் வழிகாட்டுதலின்படி, உயர்கல்வித்துறையின் கீழ் உள்ள அரசு கலை, அறிவியல், மற்றும் கல்வியியல், கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் நலன் கருதி 2026-27ஆம் ஆண்டு பணியிடமாறுதலுக்கான பொது கலந்தாய்வு நடத்திட ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி, உயர்கல்வித் துறையின் கீழ் இயங்கும் அரசு கலை. அறிவியல், மற்றும் கல்வியியல், கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள். நூலகர்கள், உடற்கல்வி இயக்குநர்கள் ஆகியோர்களுக்கு 2026-27ஆம் ஆண்டு பணியிடமாறுதலுக்கான பொது இடமாறுதல் கலந்தாய்விற்கு (General Counselling) 30.06.2026 5 07.07.2026 வாயிலாக விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த பொது கலந்தாய்வில் கலந்து கொள்ள கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் கீழ் உள்ள ஆசிரியர்கள், நூலகர்கள். உடற்கல்வி இயக்குநர்கள் http://www.dcetransfer.in என்ற இணையதள முகவரியிலும், விண்ணப்பித்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன்". இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இனி பெட்ரோல், டீசல், சிஎன்ஜி வாகனங்களைப் பதிவு செய்ய முடியாது



இனி பெட்ரோல், டீசல், சிஎன்ஜி வாகனங்களைப் பதிவு செய்ய முடியாது - அரசு அதிரடி முடிவுபுதிய மின் வாகன கொள்கைக்கு டெல்லி அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதனால் வரும் காலங்களில் பெட்ரோல், டீசல், சிஎன்ஜி வாகனங்களைப் பதிவு செய்ய முடியாதுஉலகிலேயே காற்று மாசு அதிகமாக உள்ள தலைநகரங்களில் ஒன்றாக விளங்கும் டெல்லி, குளிர்காலங்களில் மூச்சுக்கூட விட முடியாத அளவிற்கு திணறுவது வழக்கமான ஒன்று. இந்த சூழலை மாற்ற போராடி வரும் மாநில அரசு, காற்று மாசுபாட்டைக் குறைக்க புதிய மின் வாகன கொள்கையை வகுத்துள்ளது.

# அயோத்தி ராமர் கோயில் நன்கொடை விசாரணைக்கு முன்பே மீட்கப்பட்ட 58 லட்சம் ரூபாய்!




**சென்னை, ஏப்.30:** உத்தரப்பிரதேசத்தில் அமைந்துள்ள அயோத்தி ராமர் கோயிலுக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட தொகையில் கோடிக்கணக்கான ரூபாய் காணாமல் போயுள்ளதாக எழுந்துள்ள குற்றச்சாட்டு விவகாரத்தில் நாள்தோறும் பல்வேறு புதிய தகவல்கள் வெளியாகி வருகின்றன. இதுதொடர்பாக, உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் சிறப்புப் புலனாய்வுக் குழுவை ஒன்றை அமைத்துள்ள நிலையில், அக்குழு விசாரணையைத் தொடங்கியுள்ளது. இதுதொடர்பாக, 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதற்கிடையே அந்தக் குழு, இந்த வழக்கை விசாரிக்கத் தொடங்குவதற்கு முன்பே, கோயில்நன்கொடைகளிலிருந்து திருடப்பட்டதாகக் கூறப்படும் 58 லட்சம் ரூபாய் மர்மமாகக் கண்டறியப்பட்டு மீட்கப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது. அதன்படி, அறக்கட்டளையின் சில உறுப்பினர்கள் தங்களது சொந்த உள் விசாரணையை நடத்தி, திருட்டு வழக்கில் கடந்த வாரம் கைது செய்யப்பட்ட எட்டு பேரில் ஒருவரான அவினாஷ் சுக்லாவிடமிருந்து 58 லட்சம் ரூபாயை மீட்டுள்ளனர். அதாவது திருட்டுக் குற்றச்சாட்டுகள் வெளியாவதற்கு முன்பும், இதை விசாரிக்க சிறப்புப் புலனாய்வுக் குழு அமைக்கப்படுவதற்கும் முன்பே இந்த மீட்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. முறையான புகார் பதிவு செய்யப்படுவதற்கு முன்பே இந்த மீட்பு நிகழ்ந்துள்ளதால், இந்த முன்னேற்றம் முக்கியத்துவம் வாய்ந்தது என விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும், விசாரணைக்கு முன்பே மீட்புப் பணிகள் ஏன் தொடங்கின என்பது குறித்தும் அவர்கள் ஆராய்ந்து வருகின்றனர். இந்த விவகாரம், உத்தரப்பிரதேச மாநிலத்தில் அரசியல்ரீதியாகப் புயலைக் கிளப்பியுள்ளதும் கவனிக்கத்தக்கது.

# 'அப்பா குடிக்கு அடிமையாகிட்டாரு' தனியார் நிலத்தில் வேலை பார்த்த 5 சிறுவர்களை மீட்ட சிங்கப்பெண் படை



**தருமபுரி, ஏப்.29:** குடிக்கு அடிமையான அப்பாவால் தனியார் நிலத்தில் வேலை பார்த்து வந்த ஒரே வீட்டைச் சேர்ந்த ஐந்து சிறுவர்களை சிங்கப்பெண் அதிரடிப்படையைச் சேர்ந்த பெண் காவலர் மீட்டுள்ளார். திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி அடுத்த பெரியகுப்பம் பகுதியைச் சேர்ந்தவர் வெங்கடேசன். இவருக்கும் பனங்காட்டேரி பகுதியைச் சேர்ந்த பூங்கொடி என்பவருக்கும் திருமணமான நிலையில், இத்தம்பதிக்கு மூன்று பெண் குழந்தைகள் மற்றும் இரண்டு ஆண் பிள்ளைகள் உள்ளனர். ஏற்கெனவே இந்த குடும்பம் வறுமையில் வாடிக் கொண்டிருக்கின்ற சூழலில், வெங்கடேசன் மிகப் பெரிய அளவில் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி உள்ளார். அதோடு இல்லாமல் அவர் குடிப்பதற்கு தேவையான பணத்தையும் குடும்பத்தாரிடமே கேட்டு தொல்லைக் கொடுத்து வந்துள்ளார். ஆகையால், போதிய வருமானம் இல்லாமல் அந்த குடும்பம் தவிக்கும் நிலைக்கு ஆளாகி உள்ளது. இதன் விளைவாக தனது இரு பிள்ளைகளின் பள்ளிப் படிப்பையும் பாதியில் பூங்கொடி நிறுத்தி உள்ளார். மேலும், மூன்று பிள்ளைகளை அவரு பள்ளிக்கூடம் பக்கமே அவர் அனுப்பவில்லை என தெரிகின்றது. தொடர்ந்து, குடும்ப தேவைக்காக தங்கராஜ் என்பவரின் நிலத்தில் தனது ஐந்து பிள்ளைகளுடன் பூங்கொடி வேலை பார்த்து வந்துள்ளார். இந்த சூழலில் அவ்வழியாக ரோந்து வந்த சிங்கப் பெண் அதிரடிப் படையைச் சேர்ந்த உதவி காவல் ஆய்வாளர் கவிதா, சிறுவர்கள் கடும் வெயிலில் வேலை செய்வதைப் பார்த்து அதிர்ச்சியடைந்து உள்ளார். தொடர்ந்து, அவர்களை அழைத்து விசாரித்ததில், குடும்பத்தின் சூழல் குறித்து அவருக்கு தெரிய வந்துள்ளது. குறிப்பாக, இந்த குழந்தைகள் இதுவரை ஆதார் அட்டை போன்ற எந்தவொரு முக்கிய ஆவணமும் எடுக்காமல் இருந்ததும் அவருக்கு தெரிய வந்தது. வறுமை ஒருபக்கம் இருந்தாலும், ஆதார் கார்டு போன்ற ஆவணங்கள் இல்லாததாலும் அந்த குழந்தைகளை பூங்கொடியால் பள்ளக்கூடம் அனுப்ப முடியவில்லை என்பதும் தெரிய வந்துள்ளது. ஆகையால், சிறுவர்களை அங்கிருந்து கூட்டிச் சென்று திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள குழந்தைகள் நலவாரிய அதிகாரிகளிடம் அவர் ஒப்படைத்தார். அங்கு சிறுவர்களிடம் விசாரணை மேற்கொண்ட கமிட்டியினர், வாணியம்பாடி பகுதியில் உள்ள சிஎம்எஸ் குழந்தைகள் இல்லத்தில் அவர்களை ஒப்படைத்தனர்.